**டிசம்பர் – 24**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் முதல் பிரத்தியேகமான நாய்கள் பூங்கா உதகமண்டலத்தில் உள்ள ஆர்போரேட்டத்தில் (மரக் கருவூலத்தில்) திறக்கப்பட்டுள்ளது.
- அடம்யா ரக விரைவு ரோந்து கப்பல்களின் மூன்றாவது கப்பலான ICGS அமுல்யா, கோவாவில் இந்திய கடலோரக் காவல்படையால் படையில் இணைக்கப்பட்டது.
- அசாமின் கௌஹாத்தியில் உள்ள லோகப்ரியா கோபிநாத் பர்தோலோய் சர்வதேச விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் இயற்கை கருத்துரு சார் விமான நிலைய முனையத்தை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்.
- உத்தரப் பிரதேசத்தின் நொய்டாவைச் சேர்ந்த கோல்ஃப் வீரர் சுக்மான் சிங், உலகின் மிக நீண்ட காலமாக நடைபெறும் அமெச்சூர் (புது நிலை) போட்டியான 124வது அமெச்சூர் கோல்ஃப் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றிப் பெற்றார்.
- சிரியாவில் இஸ்லாமிய அரசின் (ISIS) இலக்குகளுக்கு எதிராக, ஹாக்ஐ ஸ்ட்ரைக் நடவடிக்கை எனும் ஒருங்கிணைந்த வான்வழித் தாக்குதல் தொடரினை அமெரிக்கா தொடங்கியுள்ளது.
- குவாட் நாடுகளான ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியவை தங்கள் முதல் களப் பயிற்சியை (FTX) நடத்தின.
  - குவாமில் உள்ள ஆண்டர்சன் விமானப்படை தளத்தில் கிறிஸ்துமஸ் டிராப் நடவடிக்கையின் போது இந்தப் பயிற்சி நடைபெற்றது.
- டிசம்பர் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் உலக கூடைப்பந்து தினம் 2025 ஆனது, குழுப்பணி, உள்ளடக்கம், இளையோர் மேம்பாடு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவிப்பதற்காகவும் 1891 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் கூடைப் பந்து விளையாட்டைக் குறித்து அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## UEF வர்த்தக உச்சி மாநாடு 2025




- ஐக்கியப் பொருளாதார மன்றம் (UEF) வர்த்தக உச்சி மாநாடு 2025 ஆனது தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.
- வணிக வளர்ச்சி, சந்தை அணுகல் மற்றும் உத்தி சார் கூட்டாண்மைகளை

வலுப்படுத்துவதற்காக இந்த உச்சி மாநாட்டின் போது மொத்தம் 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

- UEF உடன் தொடர்புடைய 45 கல்வி நிறுவனங்களில் 17 நிறுவனங்கள் ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) செயல்படுத்துவதை ஆதரிப்பதற்காக ஐக்கியப் பொருளாதார மன்றம் (UEF) மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டுச் சபை (UNSDC) இடையே ஒரு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இந்த உச்சிமாநாட்டின் கருத்துரு, "Unnatha Tamizhagam – 4Tn for TN by 2047" என்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## சுவச் சர்வேக்சன் 2025–26




- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் (MoHUA) மத்தியப் பிரதேசத்தின் போபாலில் 10வது ஸ்வச் சர்வேக்சன் (SS) மதிப்பீட்டினைத் தொடங்கியது.
- 2025–26 ஆம் ஆண்டிற்கான இந்த நிகழ்வின் கருத்துரு "Swacchata Ki Nayi Pehel – Badhayein Haath, Karein Safai Saath" என்பதாகும்.
- SS என்பது உலகின் மிகப்பெரிய நகர்ப்புறத் தூய்மை ஆய்வு மற்றும் குப்பை இல்லாத நகரங்களுக்கான மேலாண்மைக் கருவியாகும்.
- தற்போது நதி நகரங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளை மதிப்பிடுகின்ற ஸ்வச் சர்வேக்சன் ஆனது, கங்கை பாயும் நகரங்களுக்கு அப்பாலும் மேற்கொள்ளப்படுகிறது.
- SS ஆனது குடிமக்களின் பங்கேற்பு, பொறுப்புக் கூறல் மற்றும் நகர்ப்புறத் தூய்மையில் பெருமிதம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.


# சர்வதேசச் செய்திகள்

## மியான்மரில் இந்தியாவின் விரைவான அமலாக்கத் திட்டங்கள்

- இந்தியா மியான்மரின் மாண்டலே பிராந்தியத்தில் மூன்று விரைவான அமலாக்கத்

திட்டங்களை (QIPs) தொடங்கியது.

- ஒரு திட்டத்தில் அமராபுராவில் உள்ள சாண்டர் நெசவு மற்றும் தொழிற்கல்வி நிறுவனத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நெகிழ்வான ரேபியர் தறி நிறுவப்பட்டது.
- மற்றொரு திட்டத்தில் மாண்டலேயில் உள்ள பெண்கள் பயிற்சிப் பள்ளிக்கு ஒரு மாடிக் கட்டிடம் கட்டப் பட்டது.
- மூன்றாவது திட்டமானது மெதுவான வெப்பச் சிதைவு (ஆக்ஸிஜன் இல்லாத சூழலிலான உயிரி வெப்பமாக்கல்) மூலம் வேளாண் கழிவுகளைப் பயன்படுத்தி உருவாக்கப் படும் தூய்மையான ஆற்றலில் கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டங்கள் மீகாங்-கங்கை கூட்டுறவு (MGC) கட்டமைப்பின் கீழ் செயல்படுத்தப் படுகின்றன.




## இலங்கைக்கு IMF உதவி





- விரைவான நிதி உதவிச் செயல்முறையின் (RFI) கீழ் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் (IMF) 206 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியை அங்கீகரித்துள்ளது.

- டிட்வா புயலால் ஏற்பட்டப் பேரழிவிற்கு நடவடிக்கை எடுக்கும் விதமாக இந்த நிதி வழங்கப் படுகிறது.
- RFI என்பது அவசரகால வரவு செலவு சமநிலை (BoP) தேவைகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு விரைவான, குறுகிய கால நிதி உதவியை வழங்கும் ஒரு IMF அவசரக் கடன் செயல் முறையாகும்.
- இது குறைந்தபட்ச நிபந்தனைகள் மற்றும் முழுமையான திட்டத் தேவைகள் இல்லாமல் ஒற்றை, விரைவான நிதி வழங்கீட்டினை அளிக்கிறது.
- இதில் உள்நாட்டு உறுதியற்றத் தன்மை அல்லது வெளிப்புறத் தாக்கங்களுக்கான வழக்கமான நிதி உதவி வழி முறைகள் மற்றும் பேரிடர் சேதம் ஆனது மொத்த உள் நாட்டு உற்பத்தியில் ≥20% ஆக இருந்தால் ஒரு பெரிய இயற்கைப் பேரிடர் உதவி ஆகிய இரண்டு நிதி உதவி வழி முறைகள் உள்ளன.
- இதில் திருப்பிச் செலுத்துதல் என்பது, கண்காணிப்பானது பருப்பொருளாதார நிலைத் தன்மையை மையமாகக் கொண்டு, பொதுவாக நிலையான IMF வட்டி விகிதங்களில் 3¼ முதல் 5 ஆண்டுகள் வரையிலான காலக் கட்டத்திற்கானது ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## ஆபத்து அடிப்படையிலான வைப்புக் காப்பீட்டுக் கட்டமைப்பு




- இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியம் ஆனது, வங்கிகளுக்கான ஆபத்து அடிப்படையிலான வைப்புக் காப்பீட்டுக் கட்டமைப்பை அங்கீகரித்தது.
- இந்தக் கட்டமைப்பின் கீழ், வங்கிகள் ஆனது அவற்றின் நிதி வளம், இடர் மேலாண்மை மற்றும் சொத்து தரத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.
- பாதுகாப்பான வங்கிகள் குறைந்தக் காப்பீட்டுப் பங்களிப்புகளைச் செலுத்தலாம், அதே நேரத்தில் ஆபத்தில் உள்ள வங்கிகள் அதிகப் பங்களிப்புகள் அல்லது நெருக்கடி மிக்க மேற்பார்வையை எதிர்கொள்ளக்கூடும்.
- இந்தச் சீர்திருத்தம் நிதி உறுதித் தன்மையை வலுப்படுத்துதல், இடர் மேலாண்மையை மேம்படுத்துதல் மற்றும் வைப்புத்தொகையாளர் நம்பிக்கையை மேம்படுத்துதல்

ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பாதுகாப்பை உறுதி செய்வதோடு, மிகவும் தகவமைப்பு கொண்ட வங்கி அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் வைப்புத் தொகையாளர்களின் காப்பீட்டுத் தொகைகள் மாறாமல் உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புறக்கோள் PSR J2322-2650b


This artist's concept shows what the exoplanet called PSR J2322-2650b (left) may look like as it orbits a rapidly spinning neutron star called a pulsar (right).

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி ஆனது PSR J2322-2650b என பெயரிடப்பட்ட எலுமிச்சை வடிவ புறக்கோளைக் கண்டுபிடித்துள்ளது.
- இந்தக் கிரகம் பூமியிலிருந்து சுமார் 2,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு மில்லி விநாடி துடிப்பண்டத்தினை/பல்சரை சுற்றி வருகிறது.
- இது துடிப்பண்டத்திலிருந்து (வேகமாகச் சுழலும் நியூட்ரான் நட்சத்திரம்) கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மைல்கள் தொலைவில் 7.8 மணி நேரத்தில் ஒரு சுற்றுப்பாதையை முடிக்கிறது.
- அதன் வளிமண்டலத்தில், மிகக் குறைந்த ஆக்ஸிஜன் மற்றும் நைட்ரஜனுடன், பிரதானமாக கார்பன் சேர்மங்கள் மற்றும் ஹீலியம் உள்ளன.
- துடிப் பண்டத்திலிருந்து வரும் வலுவான ஈர்ப்பு அலை ஆற்றல் கிரகத்தை அதன் அசாதாரண எலுமிச்சை போன்ற வடிவத்தில் நீளச் செய்கின்றன.

## ககன்யானுக்கான ட்ரோக் பாராசூட் சோதனைகள்


- ககன்யான் வீரர்கள் குழு பெட்டகத்திற்கான ட்ரோக் பாராசூட் தகுதிச் சோதனைகளை இஸ்ரோ நிறைவு செய்துள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கீழ் சண்டிகரில் உள்ள டெர்மினல் பாலிஸ்டிக்ஸ் ஆராய்ச்சி ஆய்வகத்தின் (TBRL) இரயில் பாதை ராக்கெட் இயக்க (RTRS) வசதியில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டன.
- பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழையும் போது ட்ரோக் பாராசூட்டுகள் ஆனது வீரர்களின் பெட்டகத்தினை நிலைப்படுத்தி அதன் வேகத்தினை குறைக்கின்றன.
- ககன்யான் வேகக் குறைப்பு அமைப்பில் நான்கு வெவ்வேறு வகையான 10 பாரா சூட்டுகள் உள்ளன என்பதோடு, அவை ஒரு நிலையான வரிசையில் நிலை நிறுத்தப் படுகின்றன.

- இந்தப் பணி மூன்று இந்திய விண்வெளி வீரர்களை மூன்று நாட்களுக்கு 400 கிமீ உயரத்தில் உள்ள புவியின் தாழ் மட்டச் சுற்றுப்பாதையில் அனுப்பி அவர்களை மிகவும் பாதுகாப்பாக பூமிக்குத் திருப்பி அனுப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உதாண்டி சிட்டாநதி புலிகள் வளங்காப்பகம்




- உதாண்டி சிட்டாநதி புலிகள் வளங்காப்பகத்தில் நிகழ்ந்த சட்டவிரோத நில ஆக்கிரமிப்பை வன அதிகாரிகள் தடுத்தனர்.
- இந்த வளங்காப்பகம் இந்தியாவின் சத்தீஸ்கரில் அமைந்துள்ளது.
- இது உதாண்டி வனவிலங்குச் சரணாலயத்தையும் சிட்டாநதி வனவிலங்குச் சரணாலயத்தையும் இணைத்து உருவாக்கப்பட்டது.
- இந்த வளங்காப்பகம் தோராயமாக 1,842 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டு உள்ளது.
- இந்த வளங்காப்பகத்தில் உள்ள முக்கிய ஆறுகள் மகாநதி, உதாண்டி, சிட்டாநதி,

இந்திராவதி மற்றும் பைரி ஆகியவையாகும்.

- இங்கு காணப்படும் வன வகைகள் வெப்பமண்டல வறண்ட இலையுதிர் காடுகள் மற்றும் வெப்பமண்டல ஈரப்பதமான இலையுதிர் காடுகள் ஆகியவையாகும்.

## நீர்நாய்களின் வளங்காப்பு முன்னெடுப்பு





- காவிரி டெல்டாவில் காணப்படும் ஆற்று நீர்நாய்களைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மென் தோல் கொண்ட ஆற்று நீர்நாய்கள் ஆசியாவின் மிகப்பெரிய நீர்நாய் இனங்கள் ஆகும் என்பதோடு இவை IUCN செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்த இனம் இந்தியாவின் 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் முதல் அட்டவணையின் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- இந்த முன்னெடுப்பு 2025–26 ஆம் ஆண்டிற்காக 20 லட்சம் ரூபாய் நிதியுதவியுடன் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தத் திட்டம் நீர்நாய்களின் எண்ணிக்கையை கணக்கிடுதல், வாழ்விடங்களை மீட்டு எடுப்பது மற்றும் மனித-நீர்நாய் மோதல்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## தெற்குப் பெருங்கடல் கார்பன் 'முரண்பாடு' ஆய்வு

- அண்டார்டிகாவைச் சூழ்ந்துள்ள தெற்குப் பெருங்கடல் ஆனது உலகளாவியப் பெருங் கடல்களில் சுமார் 25-30% பங்கினைக் கொண்டது.
- இது மனிதனால் வெளியிடப்படும் கடல்சார் கார்பன் டை ஆக்சைடில் சுமார் 40 சதவீதத்தினை உட்கிரகிக்கிறது.
- வலுவான மேற்கத்தியக் காற்று மற்றும் அதிகப் பசுமை இல்ல வாயுக்கள் ஆனது கார்பன் நிறைந்த ஆழ்கடல் நீரை மேற்பரப்புக்கு கொண்டு வந்து $CO_2$ வாயுவை வெளியிடும் என்று பருவநிலை மாதிரிகள் கணித்துள்ளன.
- மாதிரிக் கணிப்புகளுக்கு மாறாக, 2000 ஆம் ஆண்டுகளில் இருந்து பதிவு செய்யப்பட தகவல்கள் இது அதிக கார்பனை உறிஞ்சுவதைக் காட்டுகின்றன.
- மழைப்பொழிவு, கடல் பனி இடமாற்றம் மற்றும் பனிப்பாறை உருகுதல் ஆகியவற்றில் இருந்து வரும் நன்னீர் ஆனது கார்பன் நிறைந்த நீரை மேற்பரப்பிலிருந்து 100-200 மீ

கீழே தக்க வைத்து, மேற்பரப்பு அடுக்குகளை வலுப்படுத்தியுள்ளது.

- 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து ஆழ்கடல் நீர் சுமார் 40 மீட்டர் உயர்ந்து, நிலத்தடி $CO_2$ அழுத்தத்தை ~10 நுண்ணிய வளிமண்டலங்கள் அளவிற்கு அதிகரித்துள்ளது.
- இதில் மேற்பரப்பு அடுக்கு மெலிந்து, வளிமண்டலத்தில் ஆழ் கடல் $CO_2$ நிறைந்த நீரை மேலெழும்பச் செய்தால் கார்பன் உட்கிரகிப்பு பலவீனமடையக் கூடும்.



## ஆரவல்லி மலைகளின் புதிய வரையறை





- ஆரவல்லி மலைகள் குறித்த மத்திய அரசின் புதிய வரையறையை இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்த வரையறையின் கீழ், உள்ளூர் நிலப்பரப்பிற்கு மேல் 100 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட உயரமுள்ள நிலப்பரப்புகள் மட்டுமே ஆரவல்லி மலைகளாக சட்டப் பூர்வமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

- இந்தத் தீர்ப்பு ஆனது இந்த உயர்ந்த மேலெழும்பும் நிலப்பரப்புகளில் சுரங்க ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்பைக் கட்டுப்படுத்துகிறது.
- ஆரவல்லியை காத்தல் பிரச்சாரம் என்பது இந்தக் குறுகிய வரையறையை எதிர்க்கும் குடிமக்கள் தலைமையிலான சுற்றுச்சூழல் சார் இயக்கமாகும்.
- தாழ்வான முகடுகள், காடுகள் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் சுரங்க நடவடிக்கையினால் பாதிக்கப்படக்கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.
- நிலத்தடி நீர் மீளேற்றம், பருவநிலைத் தணிப்பு மற்றும் பல்லுயிர் வளங்காப்பு ஆகியவற்றில் குறிப்பாக வட இந்தியாவில் ஆரவல்லிகள் மிகவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

# மாநிலச் செய்திகள்


## குரு தேக் பகதூர் அவர்களின் 350 ஆம் ஆண்டு நினைவு தினம்




- ஒன்பதாவது சீக்கிய குருவான ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் 350வது தியாக ஆண்டைக் குறிக்கும் வகையில் ஹரியானா சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இவர் பின்னாளில் ஆனந்த்பூர் சாஹிப்பின் ஒரு பகுதியாக மாறிய சக்-நாங்கி நகரத்தை பஞ்சாபில் நிறுவினார்.
- அவரது படைப்புகளில், சீக்கிய மதத்தின் புனித நூலான குரு கிரந்த் சாஹிப்பில் 116 கவிதைப் பாடல்கள் உள்ளன.
- இந்தியாவின் கௌரவத்தைப் பாதுகாத்ததற்கும், சமயச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், உண்மை மற்றும் நீதியை நிலை நிறுத்துவதற்கும் குரு தேக் பகதூர் நினைவுகூரப்படுகிறார்.
- கிஷன்புராவில் குரு தேக் பகதூர் வேளாண் கல்லூரியை அமைக்க உள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.
- அவரது மரபை கௌரவிக்கும் வகையில் ஒரு நினைவு நாணயம், அஞ்சல் தலை மற்றும் ஒரு விளக்கப்படப் புத்தகமும் வெளியிடப்பட்டன.

### சாத் நிச்சய்-3 திட்டம்

- பீகார் மாநில அமைச்சரவையானது அந்த மாநிலத்தை மேம்படுத்துவதற்காக 2025–2030 ஆம் ஆண்டுகளுக்கான சாத் நிச்சய்-3 திட்டத்தை அங்கீகரித்தது.
- இந்தத் திட்டம் வருமானம், வேலைவாய்ப்பு, தொழில், வேளாண்மை, கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு மற்றும் வாழ்க்கையை எளிதாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இரட்டை வேலைவாய்ப்பு-இரட்டை வருமானம், வளமான தொழில்துறை அதிகாரம் பெற்ற பீகார், வேளாண்மையில் முன்னேற்றம், மேம்பட்ட கல்வி, அணுகக் கூடிய சுகாதாரம், வலுவான அடித்தளம் மிக்க நவீன விரிவாக்கம், அனைவருக்குமான கௌரவம் - வாழ்க்கையை எளிதாக்குதல் ஆகிய ஏழு முக்கியத் தீர்மானங்கள் முன் வைக்கப் பட்டன.
- பெண்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், அரசாங்கம் சுயதொழில் செய்வதற்கு 10,000 ரூபாய் மற்றும் வணிக விரிவாக்கத்திற்கு 2 லட்சம் ரூபாய் வரை நிதியுதவி வழங்குகிறது.
- தொழில்துறை மேம்பாட்டில் 25 புதிய சர்க்கரை ஆலைகள் மற்றும் மூடப்பட்ட 9 சர்க்கரை ஆலைகளை மீண்டும் தொடங்குவது ஆகியவை அடங்கும் என்பதோடு மேலும் நகர்ப்புற மற்றும் கல்வி உள்கட்டமைப்பும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.
- சுகாதார வசதிகளில் தொகுதி அளவிலான சிறப்பு மருத்துவமனைகள் மற்றும் கிராமப்புற மருத்துவர்களுக்கான சலுகைகள் அடங்கும் என்பதோடு கலாச்சார மற்றும் தடகளப் போட்டிகள் மேம்பாட்டிற்காக விளையாட்டு மற்றும் திரைப்பட நகரங்களும் இதில் திட்டமிடப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய திட்டத்தின் கீழ் முந்தைய முன்னெடுப்புகளைச் சேர்ந்த மொத்தம் 430 திட்டங்கள் நிறைவு செய்யப்படும்.





## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### IUCN SSC தலைவர் - விவேக் மேனன்

- விவேக் மேனன் 2025–2029 ஆம் ஆண்டிற்கான IUCN இனங்கள் உயிர்வாழும் ஆணையத்தின் (SSC) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- SSC ஆணையத்தின் 75 ஆண்டு கால வரலாற்றில் அந்த ஆணையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற முதல் ஆசியக் கண்டத்தினர் இவரே ஆவார்.

- SSC என்பது IUCN அமைப்பின் மிகப்பெரிய அறிவியல் வலையமைப்பாகும்.
- இது இனங்கள் அழிவைத் தடுக்கவும், அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களை மீட்டெடுக்கவும் உதவுகிறது.
- IUCN செந்நிறப் பட்டியலை நிர்வகிக்கின்ற SSC ஆனது, வளங்காப்புக் கொள்கைகளை உருவாக்குகிறது மற்றும் உலகளாவியப் பல்லுயிர்ப் பாதுகாப்பை வழி நடத்துகிறது.





# முக்கிய தினங்கள்

## SSB படையின் எழுச்சி தினம் 2025 - டிசம்பர் 20

- சஷாஸ்திர சீமா பால் (SSB) படையானது இந்த ஆண்டு அதன் 16வது எழுச்சி தினத்தைக் கொண்டாடியது.
- SSB என்பது உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு மத்திய ஆயுதக் காவல் படை ஆகும்.
- இது 1962 ஆம் ஆண்டு சீன-இந்தியப் போருக்குப் பிறகு 1963 ஆம் ஆண்டில் சிறப்புப் படை வாரியமாக நிறுவப்பட்டது.
- இது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் தேதியன்று சஷாஸ்திர சீமா பால் என மறு பெயரிடப் பட்டது.
- 2001 ஆம் ஆண்டு முதல் இந்திய-நேபாள எல்லையையும், 2004 ஆம் ஆண்டு முதல் இந்தோ-பூடான் எல்லையையும் SSB பாதுகாத்து வருகிறது.




## தேசிய கணித தினம் 2025 - டிசம்பர் 21




- புகழ்பெற்ற இந்தியக் கணிதவியலாளர் ஸ்ரீனிவாச இராமானுஜன் (1887–1920) பிறந்த நாளை இந்த நாள் குறிக்கிறது.
- இந்திய அரசு ஆனது 2011 ஆம் ஆண்டில் இந்த நாளை அறிவித்தது.
- கணிதத்தில் ஆர்வம் காட்டவும், அறிவியல் சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை ஊக்குவிக்கவும் மாணவர்களை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பு, தசம முறை மற்றும் எதிர்மறை எண்களின் ஆரம்பகாலக் கருத்துக்கள் உட்பட இந்தியா ஒரு வளமான கணிதப் பாரம்பரியத்தைக் கொண்டு உள்ளது.

- எண் கோட்பாடு, முடிவிலித் தொடர்கள், தொடர் பின்னங்கள் மற்றும் கணிதப் பகுப்பாய்வு ஆகியவற்றில் இராமானுஜர் ஆற்றியப் பெரும் பங்களிப்புகள் ஆனது கணிதம், இயற்பியல் மற்றும் கணினி அறிவியலில் நவீன ஆராய்ச்சியை ஊக்குவித்து உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★